வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 03.07.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து உருவான **உலக ஒழுங்கு**, தற்போது, வேகமாக மாறி வருவதால், **உலக அளவிலான ஆளுகையில்** சீர்திருத்தம் தேவை என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது **கானா பயண**த்தை முடித்துக் கொண்டு, இன்று இரவு, **டிரினிடாட்-டொபாகோ** சென்றடைகிறார்.

நாட்டில், கடந்த மே மாத நிலவரப்படி, **பங்குச்சந்தையில் பதிவு பெற்ற முதலீட்டாளர் எண்ணிக்கை**, 11.5 கோடியாக அதிகரித்துள்ளது.

மத்திய சுகாதார அமைச்சகத்தின் ஏற்பாட்டில் இன்று புதுச்சேரி வந்துள்ள, **தேசிய அளவிலான ஊடக குழுவினர்**, ராஜ்நிவாசில் துணை நிலை ஆளுநரை சந்திக்கிறார்கள்.

*மோடி-கானா*

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து உருவான **உலக ஒழுங்கு**, தற்போது, தொழில் நுட்ப புரட்சி, **தெற்குலக** நாடுகளின் எழுச்சி போன்ற பல்வேறு காரணங்களால் வேகமாக மாறி வரும் நிலையில், காலனி ஆட்சிக் காலத்தில் இருந்து நீடிக்கும் பிரச்சனைகளுடன், தீவிரவாதம், பருவநிலை மாற்றம் போன்ற புதிய சவால்களையும் உலக நாடுகள் சந்திப்பதால், **உலக அளவிலான ஆளுகையில்** முக்கிய சீர்திருத்தங்கள் தேவை என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று கானா தலைநகர் **அக்ராவில்**, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், தெற்குலக நாடுகளுக்கு குரல் கொடுக்காமல், உலக அளவிலான முன்னேற்றத்தை எட்ட முடியாது என்றும், இதைக் கருத்தில் கொண்டே **ஒரே உலகம்-ஒரே குடும்பம்-ஒரே எதிர்காலம்** என்ற தொலைநோக்கு பார்வையை, இந்தியா வலியுறுத்தி

வருவதாகவும் கூறினார். பிரதமரின் கானா நாடாளுமன்ற உரை குறித்து கூடுதல் விவரங்கள்..................

மோடி-கானா

**(வாய்ஸ்)**

தங்கத்தின் நாடான கானாவில், **நிலம் மட்டுமின்றி, மக்களின் மனமும் தங்கம் தான்** என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, கானா நாடாளுமன்றதில் பேசுகையில் கூறினார். இந்தியாவும்-கானாவும், காலனி ஆதிக்கத்தின் வடுக்களை இன்னும் சுமக்கின்ற **நாடுகள் தான்** என்றாலும், நமது உணர்வில், **சுதந்திரம் மற்றும் அச்சமின்மை** நீடிக்கவே செய்வதாகவும், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு, எல்லையே கிடையாது என்றும் அவர் கூறினார்.

தற்போது உலக அளவிலான வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு, **16 சதவிகிதம் என்றும்**, உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக, விரைவிலேயே இந்தியா உருவெடுக்கும் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது உரையில் தெரிவித்தார். **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி** என்பதே இந்தியாவின் குறிக்கோள் என்றும், வளர்ச்சிப் பாதையில் இந்தியா, கானாவுடன், **தோளோடு தோள் நின்று பயணிக்கும்** என்றும் அவர் கூறினார்.

மோடி-கானா-சேர்க்கை

முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கானா தலைநகர் **அக்ராவில்**, அந்நாட்டின் முக்கிய தலைவர் டாக்டர் **குவாமேங் க்ருமா** நினைவகத்தை நேரில் சென்று பார்வையிட்டார். கானா துணை அதிபர் திருமதி **ஜேன் நானா ஓபுக்கு-ஆக்யேமாங்**, உடன் இருந்தார். பிரிட்டீஷ் காலனி ஆட்சியில் இருந்து கானா விடுதலை பெற்றதற்கான அறிவிப்பு 1957-ஆம் ஆண்டு வெளியான இடத்தில், இந்த நினைவகம் கட்டப்பட்டுள்ளது.

மோடி-வெளிநாடு

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை தமது கானா பயணத்தை முடித்துக் கொண்டு, இன்று இரவு, **டிரினிடாட்-டொபாகோ** சென்றடைகிறார். அந்நாட்டு அதிபர் திருமதி

**கிறிஸ்டின் கங்காலூ**, பிரதமர் திருமதி **கம்லா பெர்சாத் பிஸ்ஸெசார்** ஆகியோரை அவர் சந்தித்து இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கிறார். இப்பயணத்தின் போது அங்குள்ள இந்திய சமூகத்தினரை பிரதமர் சந்திக்கிறார். அந்நாட்டு நாடாளுமன்றத்தின் கூட்டு அமர்விலும் பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இருநாடுகளுக்கும் இடையிலான, ஆழமான, வரலாற்று பூர்வ உறவுகள் குறித்து ஒரு செய்தி தொகுப்பு …………

(வாய்ஸ்)

மோடி-வெளிநாடு

**(வாய்ஸ்)**

1845-ஆம் ஆண்டு முதல், அப்போதைய பிரிட்டீஷ் அரசால், பிணைத் தொழிலாளர்களாக **டிரினிடாட்** நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர்களின் வாரிசுகள், கடந்த ஐந்து-ஆறு தலைமுறைகளாக அந்நாட்டில் வசித்து வருகின்றனர். தற்போது அந்நாட்டின் மக்கள் தொகையில் 42 சதவிகிதம் பேர், இந்திய வம்சாவளியினர். அந்நாட்டின் தற்போதைய அதிபர்-பிரதமர் ஆகிய இருவருமே இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. இருநாடுகளுக்கும் இடையிலான இந்த வரலாற்று பூர்வ உறவுகள், கலாச்சார இணைப்புகள் மூலம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவைப் போலவே அங்கும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. இந்திய உணவு மற்றும் இதர பழக்க வழக்கங்கள், **டிரினிடாட்** மக்களின் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளன. அம்மக்களின் மொழியில் இந்தி வார்த்தைகள் அதிகம் இருப்பதையும் **பாலிவுட் சினிமா பாடல்களை** அவர்கள் விரும்பிக் கேட்பதையும், இன்றும் காணமுடியும். இத்தகைய கலாச்சார உறவுகளை, வர்த்தகம், பாதுகாப்பு, **டிஜிட்டல் உள்கட்டமைப்பு** போன்ற துறைகளிலும் கூடுதல் ஒத்துழைப்பாக மேம்படுத்துவதற்கான முக்கிய அடித்தளமாக, பிரதமர் திரு நரேந்திர மோடியின் **டிரினிடாட் பயணம்** அமைவதும் குறிப்பிடத் தக்கது.

*பங்குச் சந்தை*

கடந்த மே மாத நிலவரப்படி, நாட்டில் மொத்தம் 11.5 கோடி பேர், பங்குச்சந்தையில் பதிவு பெற்ற முதலீட்டாளர்களாக உள்ளனர். மே மாதத்தில் மட்டும் புதிதாக 11 லட்சம் பேர்

பங்குச்சந்தை முதலீட்டாளர்களாக பதிவு பெற்றுள்ளனர். இது அதற்கு முந்தைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 9 சதவிகிதம் அதிகமாகும். தேசிய பங்குச் சந்தை அண்மையில் வெளியிட்ட புள்ளி விவரங்களின் படி இவ்வாறு தெரிய வந்துள்ளது. தேசிய அளவிலான பங்குச் சந்தை முதலீட்டாளர் எண்ணிக்கையில், மகாராஷ்டிரா, உத்தரபிரதேஷ், குஜராத் ஆகிய 3 மாநிலங்கள் மட்டும், 36 சதவிகித பங்களிக்கின்றன. இதில், மகாராஷ்டிரா, உத்தரபிரதேஷ் ஆகிய மாநிலங்களில், பதிவு பெற்ற பங்குசந்தை முதலீட்டாளர்களின் எண்ணிக்கை, ஏற்கனவே, 1 கோடிக்கும் அதிகமாக உள்ள நிலையில், 1கோடி என்னும் அளவைத் தாண்டிய, நாட்டின் 3-ஆவது மாநிலமாக தற்போது, குஜராத் மேம்பட்டுள்ளது.

புதுச்சேரி-வருகை

மத்திய சுகாதார அமைச்சகம் மூலமான ஏற்பாட்டின் கீழ், தேசிய அளவிலான **10 உறுப்பினர் ஊடக** குழு, பத்திரிக்கைத் தகவல் அலுவலகத்தின் **கூடுதல் தலைமை இயக்குநர்** டாக்டர் மணிஷா வர்மா தலைமையில், 2 நாள் பயணமாக இன்று புதுச்சேரி வந்துள்ளது. இவர்கள் இன்று மாலை ராஜ்நிவாசில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை சந்திக்கிறார்கள். மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், சுகாதாரத் துறை இயக்குநர் திரு ரவிசந்திரன் உள்ளிட்டவர்களையும் இவர்கள் சந்திக்க உள்ளனர். மாநில காசநோய் அதிகாரி டாக்டர் வெங்கடேஷ், புதுச்சேரி மாநிலத்தின் காசநோய் ஒழிப்பு முயற்சிகள், மற்றும், இதில் பின்பற்றப்படும் சிறப்பு நடைமுறைகள் குறித்து, ஊடக குழுவினருக்கு படவிளக்கம் அளிக்கிறார்.

நாளைய தினம் இவர்கள், வில்லியனூரில் உள்ள **ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்தி**ரில், காசநோயை வெற்றி கொண்ட **TB சாம்பியன்**கள், காசநோயாளிகளுக்கு தேவையான உதவிகளை வழங்கும் **Nikshay மித்ரா**க்கள், ஆஷா பணியாளர்கள், மற்றும், காசநோய் சிகிச்சைக்கான **முதுநிலை மேற்பார்வையாளர்**களை சந்தித்து, கலந்துரையாடல் நடத்த உள்ளனர். **அரவிந்தர் ஆசிரம்** மற்றும் **ஆரோவில்**லுக்கு, ஊடக குழுவினரை அழைத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*ரயில்வே*

தெற்கு ரயில்வேயின் திருச்சிராப்பள்ளி கோட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பிரிவுகளில் பராமரிப்பு பணிகள் காரணமாக, குறிப்பிட்ட நாட்களில், ரயில் சேவைகளுக்கான கால அட்டவணை, திருத்தி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி

வரும் 9 முதல் 14-ஆம் தேதி வரை,

திருச்சி-காரைக்கால் **டீசல் EMU ரயில்**, திருச்சியில் இருந்து திருவாரூர் வரை மட்டுமே இயக்க கூடும்.

காரைக்கால்-திருச்சி **டீசல் EMU ரயில்**, காரைக்காலுக்கு பதிலாக, திருவாரூரில் இருந்து மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு, திருச்சி வந்தடையும்.

காரைக்கால்-தஞ்சாவூர் **பாசஞ்சர் ரயில்**, பாதி வழியில், சவுகரியமான ஒரு இடத்தில் 30 நிமிடங்களுக்கு நிறுத்தி வைக்கப்படும்.

வரும் 8-ஆம் தேதி, சென்னை எழும்பூரில் இருந்து புதுச்சேரிக்கு வரும் **மெயின்லைன் EMU ரயில்**, பாதி வழியில், சவுகரியமான ஒரு இடத்தில் 10 நிமிடங்களுக்கும், நிறுத்தி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*சிந்தியா*

**இண்டியா போஸ்ட்** நிறுவனத்தில் பெரிய அளவில் தொழில்நுட்ப புரட்சி ஏற்பட்டு வருவதாக மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கூறி உள்ளார். இந்நிறுவனத்தில் முதல் முறையாக தலைமை தொழில் நுட்ப அதிகாரி நியமிக்கப்பட்டு தொழில் நுட்ப மாற்றங்கள் மற்றும் புதுமைகள் புகுத்தப்பட்டு வருவதாக இன்று புதுடெல்லியில், ஆகாஷ்வாணிக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் அவர் கூறினார்.

*அமர்நாத்*

காஷ்மீரில் அனந்தநாக் மாவட்டம் பகல்காம், கந்தர்பால் மாவட்டம் பல்டால் ஆகிய 2 இடங்களில் இருந்து தொடங்கும் மலைப் பாதைகளில், இவ்வாண்டிற்கான 38 நாள் அமர்நாத் யாத்திரை முறைப்படி இன்று தொடங்கி உள்ளது. இருபாதைகளிலும் யாத்திரிகர்கள் இன்று அதிகாலை, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடையே, யாத்திரையை தொடக்கினர். பகல்காம் யாத்திரைப் பாதையில் 3 ஆயிரம் பேரும், பல்டால் பாதையில் 9 ஆயிரம் பேரும்

யாத்திரை மேற்கொண்டு வருகின்றனர். யாத்திரைப் பாதையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து இவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டனர். காஷ்மீரில் 12 ஆயிரத்து 756 அடி உயரத்தில் இமயமலையில் அமைந்துள்ள அமர்நாத் குகைக் கோவிலில் பனி லிங்கத்தை தரிசிக்க, இவ்வாண்டு 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வரக் கூடும் என எதிர்பார்க்கப் படுவதாக, ஜம்மு-காஷ்மீர் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையே, பெண்கள், குழந்தைகள், சாதுக்கள் உட்பட சுமார் 5 ஆயிரம் பேர் அடங்கிய மற்றொரு யாத்திரிகர்கள் குழு, இன்று அதிகாலை, 238 வாகனங்களில், ஜம்மு-வில் உள்ள பகவதி நகர் முகாமில் இருந்து, பகல்காம் மற்றும் பல்டால் அடிவார முகாம்களுக்கு புறப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று மாலை தத்தம் முகாம்களுக்கு சென்று சேர்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

*உத்தராகண்ட்-மழை*

உத்தராகண்டில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக சார்தாம் யாத்திரை பாதைகள் உட்பட பல்வேறு சாலைகளில் போக்குவரத்து தடை பட்டுள்ளது. கேதார்நாத் செல்லும் வழியில், நேற்று இரவு சோன்பிரயாக் அருகே சிக்கிக் கொண்ட, 40-க்கும் மேற்பட்ட பயணிகளை, மாநில பேரிடர் மீட்பு படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர். சாலை தடையை நீக்கி போக்குவரத்தை சீர்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பத்திரிநாத் செல்லும் வழியில் உம்ட்டா, கங்கோத்ரி செல்லும் வழியில் பட்வாரி, யமுனோத்ரி செல்லும் வழியில் சிலாய் பந்த் ஆகிய இடங்களிலும் நிலச்சரிவால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மாநிலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமப் புற சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் எல்லா சாலைகளையும் கூடிய விரைவில் மீண்டும் சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் உத்தராகண்ட் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*வானிலை*

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக ,வரும் 5-ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதே கால கட்டத்தில், நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 9-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் தோவாலா உள்ளிட்ட இடங்களில், 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே பெர்மிங்ஹாமில் நடைபெறும், **ஆண்டர்சன்-டெண்டுல்கர் கோப்பைக்கான**, 2-ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ஆம் நாளான இன்று, பகல் உணவு இடைவேளை வரை, இந்திய அணி, தனது முதலாவது இன்னிங்சில் 6 - விக்கெட் இழப்பிற்கு, 419- ரன் எடுத்து இருந்தது. 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் தற்போது, **1-க்கு பூஜ்யம்** என்ற கணக்கில், இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து உருவான **உலக ஒழுங்கு**, தற்போது, வேகமாக மாறி வருவதால், **உலக அளவிலான ஆளுகையில்** சீர்திருத்தம் தேவை என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது **கானா பயணத்தை** முடித்துக் கொண்டு, இன்று இரவு, **டிரினிடாட்-டொபாகோ** சென்றடைகிறார்.

நாட்டில், கடந்த மே மாத நிலவரப்படி, **பங்குச்சந்தையில் பதிவு பெற்ற முதலீட்டாளர் எண்ணிக்கை**, 11.5 கோடியாக அதிகரித்துள்ளது.

மத்திய சுகாதார அமைச்சகத்தின் ஏற்பாட்டில் இன்று புதுச்சேரி வந்துள்ள, **தேசிய அளவிலான ஊடக குழுவினர்**, ராஜ்நிவாசில் துணை நிலை ஆளுநரை சந்திக்கிறார்கள்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/03.07.2025/Script.

-------------------